# 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு
# தமிழ் கற்பதற்கான சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 13/2006)

**2010, ஏப்ரல் 30 அன்று இருந்தவாறு**

# THE TAMIL NADU TAMIL LEARNING ACT, 2006

**(TAMIL NADU ACT No. 13 OF 2006)**

**(As on the 30th April, 2010)**

தமிழாக்கம்:
சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு
வெளியிடப்பட்டது
2010

[விலை ரூ. 16.00

# 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம்

(தமிழ்நாடு சட்ட எண் 13/2006)

# THE TAMIL NADU TAMIL LEARNING ACT, 2006

(TAMIL NADU ACT No. 13 of 2006)

# 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 13/2006)


| பிரிவு | பிரிவுகளின் அமைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள் வரையறைகள். | 1 |
| 3. | தமிழ் பாடமாக இருத்தல். | 2 |
| 4. | தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு. | 2 |
| 5. | விலக்களிப்பு. | 3 |
| 6. | தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது அரசுப் பணியாளராகக் கொள்ளப்படுதல். | 3 |
| 7. | பணிப்புரை வழங்குவதற்கான அரசின் அதிகாரம். | 3 |
| 8. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. | 3 |
| 9. | விதிகளைச் செய்வதற்கு அதிகாரம். | 3 |
| 10. | இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். | 3 |

## 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 13/2006)

*[ஆளுநரின் ஏற்பிசைவை 2006 ஆம் ஆண்டு ஜூன் 9 அன்று பெற்று, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 2006 ஆம் ஆண்டு ஜூன் 12 அன்று முதன்முதலாக வெளியிடப்பட்டது.]*

*தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாகத் தமிழைக் கற்றுக் கொள்வதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.*

2006–2007 ஆம் கல்வியாண்டு முதல் இம்மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் உள்ள 1 முதல் 10 வரையிலான வகுப்புகளில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் படிப்படியான முறையில் தமிழைப் பாடங்களுள் ஒன்றாகக் கற்பதனை உறுதிசெய்வதென தமிழ்நாடு அரசினால் கொள்கை முடிவு ஒன்று எடுக்கப்பட்டிருப்பதால்;

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஏழாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடப்படும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பொருள் வரையறைகள்.**

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள், குறித்தாலன்றி,—

(அ) "கல்வி ஆண்டு" என்பது, ஜூன் முதல் நாளன்று தொடங்குகின்ற ஆண்டு என்று பொருள்படும்;

(ஆ) "தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு" என்பது, 4 ஆம் பிரிவின் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(இ) "அரசு" என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(ஈ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(உ) "பள்ளி" என்பது,–

(i) அரசால் அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் பேணிவரப்படும் தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி எதுவும்; அல்லது

(ii) மாநில நிதியத்திலிருந்து உதவி பெறுகிறதாயினும் அல்லவாயினும் அரசியலமைப்பின் 30 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலாக தனியார் கல்வி முகவாண்மை எதனாலும் நிறுவப்பட்டு, நிருவகிக்கப்பட்டு அல்லது பேணிவரப்படும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவும்; அல்லது

(iii) மாநில நிதியத்திலிருந்து உதவி பெறுகிறதாயினும் அல்லவாயினும், அரசியலமைப்பின் 30 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்கீழ் நிறுவப்பட்டு நிருவகிக்கப்படும் சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலாக மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, மெட்ரிக்குலேஷன் பள்ளி, ஆங்கிலோ–இந்தியன் பள்ளி அல்லது கீழ்த்திசைப் பள்ளி; அல்லது

(iv) இதுகுறித்து, அரசால் அறிவிக்கப்படலாகும் அத்தகைய பிற பள்ளி என்று பொருள்படும்.

**விளக்கம்.**—இந்தக் கூறின் நோக்கத்திற்காக,—

(i) மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, மழலையர் வகுப்பு முதல் V ஆம் வகுப்பு வரை கொண்டிருத்தல் வேண்டும்;

(ii) தொடக்கப் பள்ளி, I முதல் V வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iii) நடுநிலைப் பள்ளி, I முதல் VIII வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் VIII வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iv) உயர்நிலைப் பள்ளி, I முதல் X அல்லது VI முதல் X வரையிலான வகுப்புகளை அல்லது IX ஆம் மற்றும் X ஆம் வகுப்புகளை கொண்டிருத்தல் வேண்டும்;

(v) மேல்நிலைப் பள்ளி என்பது I முதல் XII, VI முதல் XII அல்லது IX முதல் XII வரையிலான வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ் பாடமாக இருத்தல்.

3. (1) தமிழ் அனைத்துப் பள்ளிகளிலும் I முதல் X வரையிலான வகுப்புகளில் ஒரு பாடமாக, I ஆம் வகுப்பிற்கு 2006–2007 ஆம் கல்வியாண்டில் இருந்தும் I மற்றும் II ஆம் வகுப்புகளுக்கு 2007–2008 ஆம் கல்வியாண்டில் இருந்தும் தொடங்கி, படிப்படியான முறையில் கற்பிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அதைப்போன்றே X ஆம் வகுப்பு வரையிலும் நீட்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, கல்வியின் மாதிரியானது, பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

| | | |
|---|---|---|
| பகுதி I | .. | தமிழ் (கட்டாயம்) |
| பகுதி II | .. | ஆங்கிலம் (கட்டாயம்) |
| பகுதி III | .. | (கணிதம், அறிவியல், சமூக அறிவியல் முதலான) பிற பாடங்கள் |
| பகுதி IV | .. | தமிழ் அல்லது ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்கள் அவர் தம் தாய்மொழியை ஒரு விருப்பப் பாடமாகக் கற்கலாம். |

தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு.

4. (1) மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக மாவட்டக் கல்வி அலுவலர் படி நிலைக்குக் குறையாத கல்வித் துறையின் அலுவலர் எவரையும், இந்தச் சட்டத்தின் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளையும் செயற்படுத்தும் நோக்கத்திற்காக தகுதிவாய்ந்த அதிகார அமைப்பாக நியமிக்கலாம் மற்றும் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு தகுதிவாய்ந்த அதிகார அமைப்புகள் நியமிக்கப்படலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பணிகளைப் புரிதலும் வேண்டும்.

5. அரசானது, தாம் தக்கதெனக் கருதுகிற அத்தகைய வரைக்கட்டுகளுக்குட்பட்டு பொது அல்லது தனி ஆணையின் மூலமாக, மாணவர் அல்லது மாணவர்களின் பிரிவு அல்லது வகை எதனையும் இந்தச் சட்டத்தின் அனைத்து அல்லது ஏதேனும் வகைமுறைகளிலிருந்து பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ விலக்களிக்கலாம். விலக்களிப்பு.

மைய சட்டம் XIV/1860.

6. 4 ஆம் பிரிவின்கீழ் அமர்த்தப்பட்ட தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி அரசுப் பணியாளராகக் கொள்ளப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது அரசுப் பணியாளராகக் கொள்ளப் படுதல்.

7. (1) அரசானது, பொதுநலனை முன்னிட்டு ஆணையின் வாயிலாக அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நேர்வு எதிலும், இந்தச் சட்டத்தின்படி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினை விசாரணை ஒன்றைச் செய்வதற்கோ அல்லது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ பணிக்கலாம் மற்றும் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது அதனால் செய்யப்பட்ட விசாரணையின் முடிவைக் குறித்தோ அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தோ வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவிற்குள் அரசிற்கு அறிக்கை செய்தல் வேண்டும். பணிப்புரை வழங்குவதற்கான அரசின் அதிகாரம்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதன் பேரில், அரசானது, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரையினைப் பிறப்பித்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய பணிப்புரையானது இறுதியானதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

8. இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு, அரசு அல்லது அதன் அலுவலர்கள் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதல் ஆகாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

9. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் சட்டப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது அப்பேரவை அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்குப் பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுக்கேற்ப நடைமுறைக்கு வராமல் போதல் வேண்டும்; எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகம் இன்றி இருத்தல் வேண்டும்.

10. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும், எழுமாயின் அரசு, தமிழ்நாடு அரசு அரசிதழில் ஆணையின்படி அறிவிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ, உகந்ததாகவோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகை முறைகளைச் செய்யலாம்; இடர்ப்பாடுகளை அகற்றுவதற் கான அதிகாரம்.

வரம்புரையாக: ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் கால அளவு ஒன்று முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் ஆகாது.